**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

S.C.67/2022

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் நாள் வியாழக் கிழமை PW7 இன்/ வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S. மும்தாஜ், B.Sc., B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

Additional witness examined as PW7

| | | |
|---|---|---|
| Date | : | 26.03.2026 |
| Name | : | கழனியப்பன் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Age | : | |

A1, 4, 5, 6, 7 present.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது திருவெண்காடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 24.07.2020 ம் தேதி 16.00 மணிக்கு திருவெண்காடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் மதி என்பவர் நிலைய பொருப்பில் இருந்த போது இளையமதுக்கூடம் அய்யனார் கோவிலை சேர்ந்த பரமசிவம், கோபாலகிருஷ்ணன் என்பவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 319/2020 U/s. 147, 148, 294(b), 307, 506(ii) IPC ன் கீழ் வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் விசாரணைக்கு எடுததுக் ொகண்டார். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ. 2 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** இவ்வழக்கின் உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளரின் கையெழுத்து நன்கு தெரியும். இவ்வழக்கினை ஆய்வாளர் பாஸ்காரன் என்பவர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மகேந்திரன், அபிமணி, ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததர். அது **அ.சா.ஆ. 4, 5 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** சாட்சிகள் கோபாலகிருஷ்ணன், அகோரம், ஹரிகிருஷ்ணராஜ், அபிமணி, சண்முகம், ராஜா, மகேந்திரன், வேல்முருகன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

இவ்வழக்கின் சம்பவம் உண்மை என தெரியவரவே வழக்கின் எதிரி நந்தன் என்பவரை 25.07.2020 ம் தேதி காலை 8.30 மணிக்கு நாங்கூர் பஸ்பாட் அருகே குற்ற காணரம் கூறி கைது செய்து கைது விபத்தை அவரது உறவினர்களுக்கு தெரியபடுத்தியும் எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்து எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றும், சாட்சிகள் கனகராஜ், பாண்டியன் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரியை விசாரிக்க தானக முன் வந்து கொடுத்த ஒப்பபுதல் வாக்குமூல்தை பதிவு செய்தும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி உச்சிபாளையம் முனியய்யா கோயில் ஆலமரத்தடியில் மறைத்து வைத்திருந்து சுமார் 45 செ.மீ நீளமுள்ள அரிவாள் 2 யை மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் முன்னிலையில் கைப்பறுதல் மகசரில் கைப்பற்றி மகசரில் கைப்பற்றி உள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்டட பகுதி மற்றும் கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ. 6,7 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. படிவம் 95 அ.சா.ஆ. 8 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** சாட்சிகள் பாண்டியன், கனகராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பெற்றுள்ளார். இவ்வழக்கின் எதிரி கனி என்பவரை 27.07.2020 ம் தேதி 12.30 மணிக்கு நாங்கூர் முக்குட்டில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி உள்ளார். இவ்வழக்கின் மற்றொரு எதிரியான இளக்கியராஜ் என்பவரை 28.07.2020 ம்தேதி 16.30 மணிக்கு தென்னாம்பட்டினம் பாடசாலையில் குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி உள்ளார். இவ்வழக்கின் மற்றொரு எதிரியான விஜய் என்பவரை 09.09.2020 ம் தேதி காலை 9.00 மணிக்கு சீர்காழி சட்டநாதபுரம் ரவுன்டானவில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி உள்ளார். இவ்வழக்கின் எதிரி சுந்தரபாண்டியன் என்பவரை 16.09.2020 தேதி 16.30 மணிக்கு சன்னானோடை மாரியம்மன் கோயில் அருகே கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி உள்ளார். இவ்வழக்கில் காயம் பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்த சீர்காழி அரசு மருத்துவமனை மருத்துவர் கார்த்திகேயன் என்பவரை அதன் பிறகு பொருப்பேற்ற ஆய்வாளர் ராஜேஷ் என்பவர் விசாரணை செய்து காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினார். **காயச்சான்று அ.சா.ஆ. 9 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** இவ்வழக்கினை பதிவு செய்த மதி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் சட்ட பிரிவுகளை மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 10 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** இவ்வழக்கின் புலன் விசாரணையினை

முடித்து 11.11.2020 ம்தேதி எதிரிகள் மீது ஆய்வாளர் ராஜேஷ் என்பவர் சட்டபிரிவுகள் U/s. 147, 148, 294(b), 307, 506(ii) , 326, IPC ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இந்த வழக்கை நான் நேரடியாக விசாரணை செய்ய வில்லை என்றால் சரிதான். என் சக அதிகாரி தயார் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்யாமல் அனைத்து வழக்கு ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தோம் என்றால் சரியல்ல. வழக்கின் தடய பொருட்கள் எங்களால் ஜோடிக்க பட்டவை என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் வாதி கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் எதிரிகள மீது பொய் வழக்கு போட்டுள்ளோம்எ ன்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லைஎன்றால் சரியல்ல.